ஸ்ரீ:

ஸ்ரீக்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீக்ருஷ்ணத்வைபாயனாய நம:.

ஸ்ரீ மஹாபாரதம்.

ஸ்வர்க்காரோஹணபர்வம்.

முதலாவது அத்யாயம்.

[1] நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் ।
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ॥

(யுதிஷ்டிரர் ஸ்வர்க்கத்தில் துரியோதனனுடைய மேன்மையைக் கண்டு அவனுடன் வஸிக்கப் பொறாமல் பீமன் முதலியோரைக் காண விரும்பியது.)

ஜனமேஜயர், "முனிவரே! என்னுடைய பாட்டன்மார்களான பாண்டவர்களும் திருதராஷ்டிர குமாரர்களும் ஒன்றின்ஒன்று மேலான [illegible] புண்ணியங்களுள்ள ஸ்வர்க்கத்தை அடைந்து எந்தஸ்தானங்களை அடைந்தார்கள்? இதனை நான் கேட்க விரும்புகிறேன். ஆச்சரியமான செய்கையுள்ளவரான வியாஸமஹரிஷியினால் அனுமதிகொடுக்கப்பட்டவர், எல்லாம் அறிந்தவராகஇருக்கிறீரென்று என்னால் கருதப்படுகிறீர்" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார்.

"அரசரே! உம்முடைய பாட்டன்மார்களான யுதிஷ்டிரர் முதலானவர்கள் த்ரிவிஷ்டபமென்னும் ஸ்வர்க்கத்தை அடைந்து எதைச் செய்தார்களோ அதைக்கேளும். தர்மராஜரான யுதிஷ்டிரர், த்ரிவிஷ்டபமென்னும் ஸ்வர்க்கத்தை அடைந்து, (அங்கு) ஒளிபொருந்தியவனும், ஆஸனத்தில் வீற்றிருப்பவனும், வீரலக்ஷ்மியினால் சூழப்பட்டு ஸூரியன்போல ப்ரகாசிப்பவனும், புண்ணிய கர்மத்தைச் செய்தவர்களும் பிரகாசிக்கின்றவர்களுமான தேவர்களோடும் ஸாத்யர்களோடும்கூடினவனுமான துரி

1. இதன் உரை விசேஷங்களை ஆதிபர்வம் முதற்பக்கம் குறிப்பில் காண்க.

யோதனனைப் பார்த்தார். பிறகு, யுதிஷ்டிரராஜர் துரியோதனனுடைய செல்வத்தைக்கண்டு அவன்மீது பொறாமைகொண்டு அங்குள்ளவர்களை நோக்கி, 'பேராசையுள்ளவனும் நீண்ட ஆலோசனையில்லாதவனுமான துரியோதனனுடன் சேர்ந்து (இருக்கும்படியான) உலகங்களை நான் விரும்பவில்லை. தேவர்களே! முன்பு பெரியவனத்தில் கஷ்டப்பட்டவர்களான நாங்கள் எவன்நிமித்தம் எல்லாப் பூமியையும் ஸுஹ்ருத்துக்களையும் பந்துக்களையும் யுத்தத்தில் பலாத்காரமாகக் கொன்றோமோ, பாஞ்சாலனுடைய புத்ரியும் தர்மத்தை அனுஷ்டிப்பவளும் மேன்மை பெற்ற அங்கங்களுள்ளவளும் எங்களுடைய பத்னியுமான திரௌபதியும் ஸபையின் நடுவில் குருக்களின் முன்னிலையில் இழுக்கப்பட்டாளோ, (அப்படிப்பட்ட) துரியோதனனைப் பார்க்க எனக்கு இஷ்டமில்லை. என்னுடைய ப்ராதாக்கள் எங்கு இருக்கின்றனரோ அவ்விடம் செல்ல நான் விரும்புகிறேன்' என்ற வார்த்தையை உரக்கச் சொல்லிக்கொண்டு விரைவாகத் திரும்பினர்.

நாரதர், அவரை நோக்கி, நகைத்துக்கொண்டு, 'ராஜஸ்ரேஷ்டனே! இவ்விதம் செய்ய வேண்டாம். ஸ்வர்க்கத்தில் வாஸம் செய்தால் விரோதமும் நசிந்துவிடும். யுதிஷ்டிர! சிறந்தகைகளுள்ளவனே! துரியோதனராஜனைப்பற்றி இவ்வித வார்த்தையை எவ்விதத்திலும் சொல்லாதே. என்னுடைய இந்த வார்த்தையையும் கேள். இந்தத் துரியோதனராஜன் தேவர்களுடன்கூட வித்வான்களும் ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களுமான ராஜஸ்ரேஷ்டர்களால் பூஜிக்கப்படுகிறான். தேவர்களுக்கொப்பான நீங்களெல்லாரும் எவனால் யுத்தத்தால் துன்புறுத்தப்பட்டு உங்கள சரீரத்தை யுத்தத்தில் ஹோமம் செய்து வீரலோக கதியை அடைந்தீர்களோ, பெரிய பயம் நேர்ந்த பொழுதும் பயமில்லாமல் பூமியில் ஆண்டு வந்தவனான அப்படிப்பட்ட இந்தத்துரியோதனன் க்ஷத்திரியதர்மத்தால் இந்தஸ்தானத்தை அடைந்தான். புத்திரனே! சூதாட்டத்தால் உண்டுபண்ணப்பட்டதை மனத்தில் வைக்கக்கூடாது. நீ திரௌபதியின் கஷ்டத்தையும் சிந்திக்கக்கூடாது. யுத்தங்களிலும் மற்ற விஷயங்களிலும் உங்களுக்கு ஞாதிகளால் உண்டுபண்ணப்பட்ட மற்றக் கஷ்டங்களையும் நீ நினைக்கக்கூடாது. முறைப்படி துரியோதனராஜனுடன் சேர்ந்திரு. ராஜனே! இது ஸ்வர்க்கம். இங்கு விரோதங்கள் இருக்கமாட்டா' என்று சொன்னார்.

நாரதரால் இவ்விதம் சொல்லப்பட்டவரும் மேதாவியும் கௌரவராஜருமான யுதிஷ்டிரர் ப்ராதாக்களைப்பற்றி வினவலாகிப் பின் வரும்

வாக்கியத்தைச் சொல்லலானர். 'பிராம்மணரே! நாரதரே! தர்மத்தை அறியாதவனும், பாபியும், பூமியிலுள்ள நல்லோர்களுக்குத் தீமையைச் செய்தவனும், மனிதர்களுடனும் யானைகளுடனும்கூடின பூமியானது சீக்கிரம் அழியவும் நாங்களும் பகை தீர்க்க விரும்பிக் கோபத்தால் எரிக்கப்படவும் காரணமாயிருந்தவனுமான துரியோதனனுக்கு ஸநாதனமான இந்த வீரலோகங்கள் கிடைத்திருக்கின்றமையால் வீரர்களும் மஹாத்மாக்களும் சிறந்த விரதமுள்ளவர்களும் ஸத்யமான பிரதிஜ்ஞையுள்ளவர்களும் உலகத்தில் சூரர்களும் ஸத்யவாதிகளுமான என்னுடைய பிராதாக்களுக்கு எந்த உலகங்கள் கிடைத்திருக்கின்றன? அவர்களையும், மஹாத்மாவும் ஸத்யஸந்தனும் குந்தியின் மைந்தனுமான கர்ணனையும் திருஷ்டத்யும்னனையும் ஸாத்யகியையும் திருஷ்டத்யும்னனுடைய புத்திரர்களையும் நான் பார்க்க விரும்புகிறேன். எந்த அரசர்கள் க்ஷத்திரியதர்மத்தால் ஆயுதங்களால் மரணமடைந்தார்களோ அவர்கள் எங்கே இருக்கின்றனர்? அந்த மன்னர்களை நான் (எங்கே) பார்ப்பேன்? நாரதரே! விராடனையும் துருபதனையும் த்ருஷ்டகேது முதலான அவர்களையும் பாஞ்சால குமாரனை சிகண்டியையும் திரௌபதியின் எல்லாப் புத்திரர்களையும் (ஒருவராலும்) அவமதிக்கமுடியாதவனை அபிமன்யுவையும் பார்க்க விரும்புகிறேன்' என்றார்.

இரண்டாவது அத்யாயம்.

———:o:———

(யுதிஷ்டிரர் தம்மவரிருக்குமிடத்திலேயே வஸிக்கவிரும்பியதும், தேவதூதன் உறவினரைக்காட்ட யுதிஷ்டிரரை நரகத்துக்கழைத்துப் போனதும், அதனைக்காணப்பொறாமல் திரும்பின யுதிஷ்டிரர் அங்குள்ளவர் தம்மவரெனத்தெரிந்து தாம் இந்திரனிடம் வர மறுத்ததும், தூதன் அதனை இந்திரனுக்குத் தெரிவித்ததும்.)

(அவர்), 'தேவர்களே! அளவற்ற பராக்ரமமுள்ளவனை கர்ணனையும் பிராதாக்களும் மஹாத்மாக்களுமான யுதாமன்யுவையும் உத்தமௌஜஸையும் இங்கு நான் பார்க்கவில்லை. எந்த மஹாரதர்கள் (என்னிமித்தம்) யுத்தமாகிற அக்னியில் சரீரங்களை ஹோமம் செய்தார்களோ, எந்த அரசர்களும் அரசகுமாரர்களும் என்னிமித்தம் யுத்தத்தில் கொல்லப்பட்டார்களோ, மஹாரதர்களும் புலிக்கொப்பான பராக்ரமமுள்ளவர்களுமான அவர்களெல்லாரும் எங்கே? புருஷச்ரேஷ்டர்களான அவர்களா

னும் இந்த உலகமானது ஜயிக்கப்பட்டதா? தேவர்களே! அந்த மஹாரதர்களெல்லாரும் இந்த உலகங்களை அடைந்திருந்தால், நான் அந்த மஹாத்மாக்களுடன்சேர்ந்து வஸிப்பேனென்று தெரிந்துகொள்ளுங்கள். அந்த அரசர்களால் அழிவற்றதும் சுபமுமான இந்த உலகம் அடையப்படவில்லையா? அப்படியானால் பிராதாக்களும் ஞாதிகளுமான அவர்களில்லாமல் நான்வஸிக்கமாட்டேன். அக்காலத்தில், (இறந்தவர்களுக்கு) ஜலதர்ப்பணம் செய்யும்போது, 'கர்ணனுக்கு ஜலதர்ப்பணம்செய்' என்று சொன்ன தாயாரினுடைய வசனத்தைக் கேட்டு அதனால் (இப்பொழுதும்) வருத்தமடைகிறேன். தேவர்களே! ஒப்பற்ற அறிவுள்ளவனான அந்தக்கர்ணனுடைய தாயாருடைய பாதங்களுக்கொப்பான இருபாதங்களையும் பார்த்தும் நான் பிறருடையபடையைப் பீடிப்பவனான அவனை அனுஸரிக்கவில்லையென்பதைப்பற்றியும் அடிக்கடி பரிதபிக்கிறேன். கர்ணனுடன் சேர்ந்த எங்களை யுத்தத்தில் இந்திரனும் ஜயிக்கமாட்டான். எவன் என்னால் அறியப்படாமல் ஸவ்யஸாசியினால் கொல்லப்பட்டானோ ஸூரியகுமாரனான அந்தக்கர்ணனை எவ்விடத்திலிருப்பவனாயினும் நான் பார்க்கவிரும்புகிறேன். பயங்கரமான பராக்ரமமுள்ளவனும் எனக்குப்பிராணனைக்காட்டிலும் மிக்க பிரியனுமான பீமனையும் இந்திரனுக்கொப்பான அர்ஜுனனையும் யமனுக்கொப்பான நகுலஸஹதேவர்களையும் தர்மத்தைச் செய்பவளான அந்தப் பாஞ்சாலியையும் நான் பார்க்க விரும்புகிறேன். இங்கு இருக்க எனக்கு விருப்பமில்லை. இவ்விதம் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன். தேவஸ்ரேஷ்டர்களே! பிராதாக்களில்லாதவனான எனக்கு ஸ்வர்க்கத்தால் என்னபயன்? 'அவர்கள்எங்கே இருக்கிறார்களோ அது எனக்கு ஸ்வர்க்கம். இது ஸ்வர்க்கமன்று' என்பது என்னுடைய கருத்து' என்று சொன்னார்.

தேவர்கள், '(யுதிஷ்டிரரே!) உமக்கு அவ்விடத்தில் ச்ரத்தையிருக்குமானால் அவ்விடம் போகலாம், தாமதிக்கவேண்டாம். நாங்கள் தேவராஜனுடைய கட்டளையினால் உமக்குப் பிரியத்தைச்செய்ய (ஆபத்தர்களாக) இருக்கிறோம்' என்று சொன்னார்கள். தேவர்கள் அந்த யுதிஷ்டிரரை நோக்கி இவ்விதம் சொல்லிவிட்டுப் பிறகு தேவதூதனை நோக்கி, 'பகைவரைத்தபிக்கச் செய்பவனே! யுதிஷ்டிரருக்கு ஸுஹ்ருத்துக்களைக் காண்பிப்பாயாக' என்று உத்தரவுசெய்தார்கள். ராஜச்ரேஷ்டரே! பிறகு, குந்திபுத்திரரான அரசரும் தேவதூதனும் சேர்ந்து அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் இருக்குமிடம் சென்றார்கள். முன்னால் தேவதூதனும் பின்னால் யுதிஷ்டிரராஜருமாக அமங்களமான

தும், செல்லமுடியாததும், பாபகர்மத்தைச் செய்தவர்களால் அடையப்பட்டதும், இருளால் சூழப்பட்டதும், பயங்கரமானதும், தலைமயிர்களாகிற பாசிக்கொத்துக்களும் புல்தரைகளுமுள்ளதும், பாவத்தைச் செய்தவர்களுடைய வாஸனைகளுடன்கூடினதும், மாம்ஸமும் உதிரமுமாகிற சேறுள்ளதும், காட்டு ஈக்களாலும் [1]பயங்கரமான கரடிகளாலும் ஈக்களாலும் கொசுக்களாலும் சூழப்பட்டதும், இங்குமங்குமாக நாற்புறங்களிலும் பிணங்களால் சூழப்பட்டதும், எலும்புகளாலும் கூந்தல்களாலும் நிறைந்ததும், பூச்சிகளாலும் புழுக்களாலும் வியாபிக்கப்பட்டதும், ஜ்வலிக்கின்ற அக்னியினால் நாற்புறங்களிலும் சூழப்பட்டதும், இரும்புபோன்ற முகமுள்ள காகம் முதலானவைகளாலும் கழுகுகளாலும் ஸஞ்சரிக்கப்பட்டதும், ஊசிபோன்றமுகமுள்ளவைகளும் விந்தியமலைக்கொப்பானவைகளுமான பிரேதங்களால் சூழப்பட்டதும், புஜங்களும் தொடைகளும் கைத்தலங்களும் வயிறுகளும் பாதங்களும் வெட்டப்பட்டவர்களும் மேதஸ் உதிரம் இவைகளுடன் கூடினவர்களும் ஆங்காங்கு உடலை நசுக்கப்பட்டவர்களுமான மனிதர்களுடன் கூடினதுமான மார்க்கத்தில் சென்றார்கள். தர்மாத்மாவான அந்த அரசர் பிணங்களால் கெட்ட நாற்றமுள்ளதும் அசுபமானதும் மயிர்க் கூச்சத்தை உண்டுபண்ணுவதுமான அந்த மார்க்கத்தின் மத்தியில் பலவாறாக ஆலோசனை செய்துகொண்டு சென்றார். குந்தியின் புத்திரரான யுதிஷ்டிரர் உஷ்ணமான ஜலத்தினால் நிறைந்ததும் அடைவதற்குச் சிறிதும் முடியாததுமான நதியையும், கூர்மையுள்ளதும் கத்திகளால் நிறைந்ததுமான அஸிபத்ரவனத்தையும், தபிக்கப்பட்ட சிறிய பாற்கற்களையும், காய்ச்சப்பட்ட இரும்புமயமான கற்களையும், நாற்புறங்களிலும் கொதிக்கும்படி வைக்கப்பட்டவைகளும் இரும்பினால் செய்யப்பட்டவைகளுமான எண்ணெய்க்குடங்களையும், கூரிய முட்களுள்ளதும் தொடமுடியாததுமான கூடசால்மலத்தையும், பாப கர்மத்தைச் செய்தவர்களுக்கு முறையுள்ள யாதனைகளையும் பார்த்தார். அவர் கெட்ட நாற்றமுள்ள அந்த மார்க்கத்தைக்கண்டு தேவதூதனை நோக்கி, 'நாம் இவ்விதமான இந்த மார்க்கத்தில் எவ்வளவு தூரம் போகவேண்டும்? என்னுடைய ஸஹோதரர்களான அவர்கள் எங்கே இருக்கின்றனர்? அதனை எனக்குச் சொல். இந்தத் தேசமானது தேவர்களுள் யாருடையது? இதனை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்று வினவினர்.

1. 'உத்பாதக' என்பது மூலம்.

அந்தத் தேவதூதன் தர்மராஜருடைய அந்த வார்த்தையைக் கேட்டுத் திரும்பி அவரை நோக்கி, 'நீர் இது வரையில் தான் வரலாம். என்னால் திருப்பிவிடத் தகுந்தவராகிறீர். தேவர்களால் நான் அவ்விதம் சொல்லப்பட்டேன். ராஜஸ்ரேஷ்டரே! நீர் களைப்படைந்திருந்தால் வந்து விடும்' என்று சொன்னான். பாரதரே! யுதிஷ்டிரரோ துயர முற்றவரும் அந்த வாசனையினால் மூர்ச்சையடைந்தவருமாகித் திரும்பு வதில் மனங்கொண்டு திரும்பினார். திரும்பினவரும் தர்மாத் மாவும் துக்கத்தாலும் சோகத்தாலும் வியாபிக்கப்பட்டவருமான அவர் அவ்விடத்தில் நாற்புறங்களிலும் சொல்லுகின்றவர்களுடைய தீன மான வார்த்தைகளைக் கேட்டார். (அவையாவன)—'ஓ! ஓ! தர்மபுத்தி ரரே! ராஜரிஷியே! புண்ணியமான குலத்தில் பிறந்தவரே! பாண்டவரே! எங்களை அனுக்கிரஹிக்கவேண்டியதற்காக ஒரு முகூர்த்தம் வரையில் நில்லும். ஐயா! (ஒருவராலும்) அவமதிக்கமுடியாதவரான நீர் வரும் பொழுது உம்முடைய மணத்தைப் பின்தொடர்ந்தும் புண்யமுமான காற்றானது வீசுகிறது. அதனால், எங்களுக்கு ஸுகமுண்டாயிற்று. குந்தியின் குமாரரே! புருஷஸ்ரேஷ்டரே! ராஜஸ்ரேஷ்டரே! நாங்கள் உம்மை பார்த்துக்கொண்டிருந்தால் நீண்டகாலம் ஸுகம் பெறு வோம். நீண்டகைகளுள்ளவரே! பாரதரே! கௌரவ்யரே! நீர் ஒரு முகூர்த்தகாலம் இங்கு நில்லும். நீர் நின்றுகொண்டிருந்தால் யாதனையானது எங்களைப் பீடிக்கிறதில்லை.' (என்பன). ராஜரே! அவர் அவ்விடத்தில் நாற்புறங்களிலும் சொல்லுகின்றவர்களும் வேதனை யுள்ளவர்களுமான ஜனங்களுடைய இப்படிப் பலவிதமான தீனவசனங் களைக் கேட்டார். அந்த யுதிஷ்டிரரும், தீனமாகச் சொல்லுகின்ற அவர் களுடைய வார்த்தையைக் கேட்டுக் கருணைமேலிட்டு 'ஆ! கஷ்டம்' என்று சொல்லி நின்றார். அந்தப் பாண்டவர், வாட்டமுற்றவர்களும் துக்கப் படுகின்றவர்களுமான அவர்களுடைய அந்த வார்த்தைகளை, முன் அடிக் கடி கேட்கப்பட்டவைகளாக இருந்தும், (அப்பொழுது) அறியவில்லை. அந்த வார்த்தைகளை அறியாதவரும் தர்மபுத்திரருமான யுதிஷ்டிரர், 'நீ ங்கள் யார்? எதற்காக இங்கிருக்கிறீர்கள்?' என்று வினவினார். இவ்வி தம் வினவப்பட்ட அவர்களெல்லாரும், பிறகு, 'பிரபுவே! நான் கர்ணன்; நான் பீமஸேனன்; நான் அர்ஜுனன்; நான் நகுலன்; நான் ஸஹதே வன்; நான் திருஷ்டத்யும்னன்; நான் திரௌபதி; (நாங்கள்) திரௌ பதியின் புத்திரர்கள்' என்று இவ்விதம் நாற்புறங்களிலும் உரக்கக் கூவி னார்கள். அரசரே! அப்பொழுது, அவ்வரசர் அவ்விடத்திற்குத் தகுந்த

வைகளான அந்த வார்த்தைகளைக் கேட்டு, பிறகு, 'இது தெய்வத் தால் செய்யப்பட்டதா? மஹாத்மாக்களான கர்ணனாலும் அழகிய இடையுள்ளவளான திரௌபதியினாலும் திரௌபதியின்குமாரர்களா லும் செய்யப்பட்ட பாப கர்மமா? பாபஸம்பந்தமுள்ளதும் மிக்க பயங் கரமுமான இந்த இடத்தில் இருப்பவர்களும் புண்யகர்மத்தைச் செய்த வர்களுமான இவர்களனைவரிடத்திலும் பாவத்தை நான் அறியவில்லை. திருதராஷ்டிரபுத்திரனான துர்யோதனராஜன் என்னசெய்து, அவ்விதம் ஒளியுடன் கூடினவனும் மஹேந்திரன்போலச் செல்வமுள்ளவனும் மிகப் பூஜிக்கப்பட்டவனுமாகிப் பாவிகளான எல்லா அஸுரர்களுடனும் வஸிக் கிறான்? தர்மத்தையறிந்தவர்களும் சூரர்களும் ஸத்யத்தையும் சாஸ்திரங் களையும் முக்கியமாகக்கொண்டவர்களும் க்ஷத்திரியதர்மத்தில் பற்றுத லுள்ளவர்களும் வித்வான்களும் விதிப்படி யாகஞ்செய்தவர்களும் மிகுதி யான தக்ஷிணையைக்கொடுத்தவர்களுமான இவர்களெல்லாரும் இப்பொ ழுது நரகத்தை அடைந்திருப்பது எதனுடையகாரியம்? நான் தூங்குகி றேனா? விழித்துக்கொண்டிருக்கிறேனா? அறிவுள்ளவனாக இருக்கிறேனா? பிரஜ்ஞையை இழந்தவனாக இருக்கிறேனா? ஓ! ஓ! இது சித்தத்தின் விகா ரமா? அல்லது, எனக்குச் சித்தப்பிரமையா?' என்று ஆலோசித்தார். யுதிஷ்டிரராஜர் இவ்விதம் துக்கத்தாலும் சோகத்தாலும் கவரப்பட்ட வரும் சிந்தையினால் கலங்கின இந்திரியங்களுள்ளவருமாகிப் பலவிதம் ஆலோசித்தார். தர்மபுத்திரரான யுதிஷ்டிரராஜர் கடுஞ்சினங்கொண்டு தேவர்களையும் தர்மத்தையும் நிந்தித்தார். கடுமையான சோகத்தால் மிகத் தபிக்கப்பட்டவரான அவர் தேவதூதனை நோக்கி, 'நீ எவர்களுடைய தூதனோ அவர்களிடம் செல். 'நான் அவ்விடம் வரமாட்டேன். (இவ் விடத்திலேயே) வஸிக்கிறேன்' என்று சொல். ஸுகத்தை அனுபவித்த வர்களான என்னுடைய இந்தப் பிராதாக்கள் என்னை ஆச்ரயித்ததனால் துக்கப்படுகின்றனர்' என்று சொன்னார். அரசரே! புத்தியுள்ளவரும் பாண்டுவின் புத்திரருமான யுதிஷ்டிரரால் இவ்விதம் சொல்லப்பட்ட அந்தத் தேவதூதன் அப்பொழுது தேவர்களுக்கரசனான இந்திரன் இருக்குமிடம் சென்று தர்மராஜர் செய்யவிரும்பியிருப்பதை, அவர் சொல்லியபடி, முழுவதும் தெரிவித்தான்.

மூன்றாவது அத்யாயம்.

—:o:—

(யுதிஷ்டிரரின் உறுதியைக்கண்டு இந்திரன்முதலியவர்கள் வந்ததும், யமன் யுதிஷ்டிரரைப் புகழ்ந்து நரகங்கள் மாயையால் வந்தன வென்றதும், யுதிஷ்டிரர் தேவசரீரம் பெற்றுத் தேவரிஷிகள் துதிக்கத் தம்பியரிருந்தமிடம் சென்றதும்.)

கௌரவ்யரே! குந்தியின் புத்திரரும் தர்மராஜருமான யுதிஷ்டிரர் ஒரு முகூர்த்தகாலம் நின்றவுடன், இந்திரன் முதலான தேவர்கள் அவ்விடம் வந்தார்கள். அந்தத் தர்மமும், அந்த வேந்தனை நன்கு பரீக்ஷை செய்துவிட்டு வடிவமெடுத்துக்கொண்டு குருராஜரான அந்த யுதிஷ்டிரர் எவ்விடத்திலிருக்கிறாரோ அவ்விடம் வந்தது. ராஜரே! பிரகாசிக்கின்ற வடிவமுள்ளவர்களும் புண்யமும் பரிசுத்தமுமான செய்கையுள்ளவர்களுமான அந்தத் தேவர்கள் வந்தவுடன், அந்த இருள் விலகிவிட்டது. அவ்விடத்திலிருந்தவைகளான பாவிகளுடைய அந்த யாதனைகளும் வைதரணியென்னும் நதியும் முள்ளிலவமரமும் பயங்கரமான இரும்புக்குடங்களும் கற்களும் அங்கு நாற்புறங்களிலுமிருந்த விகாரமான சரீரங்களும் காணப்படவில்லை. கௌரவ்யரான அரசர் மிகச் சிறந்த ஒளியுள்ள அவர்களனைவரையும் கண்டார். பாரதரே! பிறகு, ஸுகமான ஸ்பரிசமுள்ளதும் புண்ணியமான வாஸனையைத் தரிப்பதும் சுத்தமும் மிக்க குளிர்ச்சியுள்ளதுமான காற்றானது தேவர்களுடைய அருகிலிருந்து வீசிற்று. மருத்துக்களும் இந்திரனும் வஸுக்களும் அச்வினிதேவர்களும் ஸாத்யர்களும் ருத்ரர்களும் ஆதித்யர்களும் மற்றுமுள்ள தேவர்களும் ஸித்தர்களும் சிறந்த ரிஷிகளுமான எல்லாரும், சிறந்த தேஜஸ்ஸுள்ளவரும் தர்மபுத்திரருமான அரசர் இருக்குமிடத்திற்கு வந்தார்கள். பிறகு, தேவர்களுக்கரசனும் சிறந்த காந்தியுள்ளவனுமான இந்திரன், யுதிஷ்டிரரை நோக்கி ஸமாதானஞ் செய்துகொண்டு, பின்வரும் வசனத்தைச் சொல்லலானான்.

'யுதிஷ்டிரரே! சிறந்த கைகளுள்ளவரே! தேவக்கூட்டத்தார் உம்மிடத்தில் ஸந்தோஷமடைந்தார்கள். புருஷச்ரேஷ்டரே! பிரபுவே! இவ்வளவு போதும். வாரும்; வாரும். நீண்ட கைகளுள்ளவரே! உம்மால் ஸித்தியானது அடையப்பட்டது. உமக்கு அக்ஷயமான உலகங்களும் கிடைத்தன. (உம்முடைய) பிராதாக்களுக்கும் ஸுஹ்ருத்துக்களுக்கும் நித்யமும் மிகப் பூஜிக்கப்பட்டதுமான கதியானது ஏற்பட்டது. நீர் கோபித்துக்கொள்ளக்கூடாது. என்னுடைய இந்த

வார்த்தையையும் கேளும். ஐயா! எல்லா அரசர்களும் அவச்யமாக நரகத்தைப் பார்க்கவேண்டும். புருஷச்ரேஷ்டரே! புண்யங்களும் பாவங்களும் இரண்டு வகைகளாக இருக்கின்றன. (அவற்றுள்) எவன் முந்திப் புண்யத்தை அனுபவிக்கிறானோ அவன் பிந்தி நரகத்தை அடைகிறான். எவன் முந்தி நரகத்தை அடைகிறானோ அவன் பிந்தி ஸ்வர்க்கத்தை அடைகிறான். எவன் அதிகமான பாவத்தைச் செய்தவனோ அவன் முதலில் ஸ்வர்க்கத்தை அடைகிறான். தர்மம் தவறாதவரே நீர் அதிகமான புண்ணியகர்மங்களைச் செய்தவர். சிறிது பாவமுள்ளவர். அரசரே! ஆகையால், மேன்மையை விரும்புகிறவனை என்றால் நீர் இவ்விதம் நடத்தப்பட்டீர். உம்மால் த்ரோணர் புத்திரர்விஷயத்தில் வியாஜத்தால் வஞ்சிக்கப்பட்டாரன்றோ? அரசரே! ஆகையால்,உமக்கு வியாஜத்தினாலேயே நரகம் காண்பிக்கப்பட்டது. பீமஸேனனும் அர்ஜுனனும் நகுல ஸஹதேவர்களும் க்ருஷ்ணையென்னும் த்ரௌபதியும் உம்மைப் போலவே வியாஜத்தால் நரகத்தை அடைந்தார்கள். புருஷச்ரேஷ்டரே! வாரும். அவர்களும் பாபத்திலிருந்து விடுபட்டார்கள். பரதச்ரேஷ்டரே! உம்முடைய பக்ஷத்தைச் சார்ந்தவர்களான எந்த அரசர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டார்களோ அவர்களனைவரும் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டார்கள். அவர்களைப் பாரும். நீர் எவனுக்காகப் பரிதபிக்கிறீரோ சிறந்த வில்லாளியும் ஆயுதங்களை ஏந்தியவர்களான அனைவருள்ளும் சிறந்தவனுமான அந்தக் கர்ணனும் உத்தமமான ஸித்தியை அடைந்தான். பிரபுவே! சிறந்த கைகளுள்ளவரே! புருஷச்ரேஷ்டரே! புருஷச்ரேஷ்டனும் தனக்குரிய ஸ்தானத்தை அடைந்தவனும் ஸூரியகுமாரனுமான அந்தக் கர்ணனைப் பாரும். சோகத்தை விடும். தம் தம் ஸ்தானத்தை அடைந்தவர்களான பிராதாக்களையும் புத்திரர்களையும் உமது பக்ஷத்தைச்சார்ந்த மன்னர்களையும் பாரும். உம்முடைய மனத்திலுள்ள வருத்தம் விலகட்டும். கௌரவரே! நீர் முதலில் கஷ்டத்தை அனுபவித்தீர். இனிமேல் சோகமும் ரோகமுமற்றவராக என்னுடன் ஸஞ்சாரம் செய்யும். சிறந்த கைகளுள்ளவரே! ராஜரே! நீர் செய்த புண்ய கர்மங்கள் தவங்கள் தானங்கள் அடைந்தஞானங்கள் இவற்றின் பயனை அடையும். இப்பொழுது, உம்மைத் தேவர்களும் கந்தர்வர்களும் சிறந்தவர்களான அப்ஸரஸுகளும் அழுக்கற்ற ஆடைகளையும் ஆபரணங்களையும் தரித்துக்கொண்டு மங்களமாக ஸ்வர்க்கத்தில் உபசரிக்கட்டும். சிறந்த கைகளுள்ளவரே! நீர் ராஜஸூயத்தால் ஜயிக்கப்பட்டவைகளும் அச்வமேதத்தால் உண்டுபண்ணப்பட்டவைகளுமான உலகங்களையும்

தவத்தின் சிறந்த பயனையும் அடையும். யுதிஷ்டிரரே! எல்லா அரசர்களுக்கும் மேலாகவுள்ள உலகங்கள் உமக்குக் கிடைத்தன. பார்த்தரே! நீர் அவைகளில் ஹரிச்சந்திரன்போல ஸஞ்சரிக்கப்போகிறீர். மாந்தாதா என்னும் ராஜரிஷியானவர் எவ்விடத்தில் இருக்கிறாரோ பகீரதனென்னும் அரசன் எந்த இடத்தில் இருக்கிறானோ துஷ்யந்த குமாரனான பரதன் எந்த இடத்தில் இருக்கிறானோ அந்தவிடத்தில் நீர் ஸஞ்சரிக்கப்போகிறீர். குந்தியின் புத்திரரே! ராஜேந்திரரே! புண்ணியமானதும் மூவுலகங்களையும் பரிசுத்தப்படுத்துகின்றதுமான ஆகாசகங்கை யென்னும் தேவநதியானது இதோ இருக்கிறது. இதில் ஸ்நானம் செய்து செல்லும். இதில் ஸ்நானம் செய்தால் உமக்கு மானிடத்தன்மை விலகிவிடும். சோகமும் சிரமமும் பகையுமற்றவராவீர்' என்று சொன்னான்.

தேவேந்திரன் இவ்விதம் சொல்லும்பொழுது, பிரத்யக்ஷமாகச் சரீரத்தைஅடைந்த தர்மராஜாவானவர், தம்முடைய புத்திரரும் கௌரவ ஸ்ரேஷ்டருமான யுதிஷ்டிரரை நோக்கி, 'ஓ! ஓ! ராஜனே! சிறந்தப்பிரஜ்ஞையுள்ளவனே! புத்திரனே! என்னிடத்தில் பக்தியினாலும் உண்மையான வாக்கியங்களினாலும் பொறுமையினாலும் இந்திரியங்களின் அடக்கத்தாலும் நான் உன்னிடத்தில் பிரீதியுள்ளவனானேன். ராஜனே! என்னால் உன்னை இது மூன்றாவது பரீக்ஷை செய்யப்பட்டது. பார்த்தனே! நீ ஸ்வபாவத்திலிருந்து காரணத்தைக்கொண்டு சலிக்கச்செய்ய முடியாதவனாக இருக்கிறாய். நீ முன்னம் த்வைதவனத்தில் அரணியைக்கொண்டுபோன மானைத் தேடினபொழுது என்னால் கேள்விகேட்டுப் பரீக்ஷிக்கப்பட்டாய். அதனையும் தாண்டினாய். பாரத! ஸ்வர்க்காரோகணகாலத்தில், திரௌபதியும் ஸஹோதரர்களும் மரித்தபொழுது, நாயின் வடிவத்தைத் தரித்த என்னால் மறுபடியும் நீ அவ்விடத்தில் பரீக்ஷிக்கப்பட்டாய். சிறந்த பாக்கியமுள்ளவனே! பிராதாக்களின் நிமித்தம் நீ (நரகத்தில்) நிற்கவிரும்புகிறாய் என்னும் இது மூன்றாவது. பரிசுத்தனும் பாபமற்றவனும் ஸுகமுள்ளவனுமாக இருக்கிறாய். பார்த்த! ராஜனே! உன்னுடைய பிராதாக்கள் நரகத்தை அடையத்தகுந்தவர்களல்லர். இது தேவராஜனான மஹேந்திரனால் பிரயோகிக்கப்பட்ட மாயை. ஐயனே! எல்லா அரசர்களாலும் நரகங்கள் அவசியம் பார்க்கப்படத்தக்கவைகள். ஆகையால், உன்னால் ஒரு முகூர்த்தகாலம் இந்தப் பெரிய துக்கம் அடையப்பட்டது. ராஜனே! ஸவ்யஸாசியாவது பீமஸேனனாவது புருஷஸ்ரேஷ்டர்களான நகுல ஸஹதேவர்களாவது ஸத்யமானவாக்குள்ளவனும் சூரனுமான கர்ணனாவது நீண்டகாலம் நர

கத்தை அடையத் தகுந்தவர்களல்லர். ராஜபுத்திரியான திரௌபதியும் எவ்விதத்திலும் நரகத்தை அடையத்தகுந்தவளல்லள். பரதஸ்ரேஷ்டனே! வா; வா. [1]மூவுலகங்களிலும் செல்லுகின்றதான கங்கையைப் பார்' என்று சொல்லினர்.

இவ்வாறு சொல்லக்கேட்டவரும் உம்முடைய பாட்டனாரும் அரசருமான அந்த ராஜரிஷியானவர் தர்மதேவதையோடும் எல்லாத் தேவர்களோடும், தேவநதியும் புண்ணியமானதும் பரிசுத்தியைச் செய்கின்றதும் ரிஷிகளால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டதுமான கங்கைக்குச் சென்று அதில் ஸ்நானம் செய்து மானிடசரீரத்தை விட்டார். அந்தத் தீர்த்தத்தில் நன்கு ஸ்நானஞ்செய்த தர்மராஜரான யுதிஷ்டிரர், பிறகு, திவ்யமான சரீரமுள்ளவரும் பகையும் மனவருத்தமும் அற்றவருமானார். பிறகு, புத்திமானும் கௌரவராஜருமான அவர், தேவர்களால் சூழப்பட்டவரும் தர்மத்தோடுகூடினவரும் மஹரிஷிகளால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவருமாகப் புருஷஸ்ரேஷ்டர்களும் சூரர்களுமான அந்தப் பாண்டவர்களும் திருதராஷ்டிரகுமாரர்களும் எந்த இடத்தில் கோபமற்றவர்களாகத் தம் ஸ்தானங்களை அடைந்திருக்கிறார்களோ அவ்விடம் சென்றார்.

நான்காவது அத்யாயம்.

---:o:---

(யுதிஷ்டிரர் ஸ்வர்க்கத்தில் கிருஷ்ணர் கர்ணன் முதலியவர்களைக் கண்டதும், தம்தம் இடத்தை அடைந்த திரௌபதி புத்திரர் முதலியவர்களை இந்திரன் யுதிஷ்டிரருக்குக் காட்டியதும்.)

பிறகு, யுதிஷ்டிரராஜர், தேவர்களாலும் ரிஷிகளாலும் மருத்கணங்களாலும் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு அந்தக் கௌரவ ஸ்ரேஷ்டர்கள் இருக்குமிடம் சென்றார். குந்தியின் குமாரரான அவர், அவ்விடத்தில் [2]பிரம்மத்தினுடையதான சரீரத்துடன்கூடினவரும் முன் பார்க்கப்பட்ட அந்தச் சரீரத்துடன் ஒத்திருப்பதினாலேயே அறிவிக்கப்பட்டவரும் தம் சரீரத்தினால் ஜ்வலிக்கின்றவரும் கோரமானவைகளும் சிறந்தவைகளும் புருஷவடிவமுள்ளவைகளும் திவ்யமானவைகளுமான சக்ரம்

---

1. வேறுபாடம்.
2. 'பிரம்மாவினால் ஆராதிக்கத் தகுந்த' என்பது பழைய உரை.

முதலான அஸ்திரங்களால் ஸேவிக்கப்பட்டவரும், வீரனும் அழகிய காந்தியுள்ளவனுமான அர்ஜுனனால் உபாஸிக்கப்படுகின்றவரும், அவ்வித ஸ்வரூபமுள்ளவரும் மதுஸூதனருமான கோவிந்தரைக் கண்டார். புருஷச்ரேஷ்டர்களும் தேவர்களால் பூஜிக்கப்பட்டவர்களுமான அவ்விருவர்களும் யுதிஷ்டிரரைப் பார்த்து வழக்கம் போலப் பூஜை செய்தார்கள். குருநந்தனரான யுதிஷ்டிரர், பிறகு, சஸ்திரதாரிகளுள் சிறந்தவனும் பன்னிரண்டு ஸூரியர்களோடுகூடினவனுமான கர்ணனை வேறு இடத்தில் பார்த்தார். பிறகு, வேறு இடத்தில், மருத்கணத்தால் சூழப்பட்டவனும் பிரபுவும் அந்தச் சரீரத்தோடேயே இருப்பவனும் சரீரமுள்ள வாயுவின் பக்கத்தில் திவ்யமான சரீரத்துடன் இருப்பவனும் சிறந்த ஒளியுள்ளவனும் மேலான ஸித்தியை அடைந்தவனுமான பீமஸேனனைப்பார்த்தார். குருநந்தனர், அவ்வாறே, அச்வினீதேவர்களுடைய ஸ்தானத்தில் தம் தேஜஸினால் ஜ்வலிக்கின்றவர்களான நகுலனையும் ஸஹதேவனையும் பார்த்தார். அவ்வாறே, தாமரை மலர்களாலும் குவளைமலர்களாலுமாகிய மாலையை அணிந்தவளும் சரீரத்தால் ஸ்வர்க்கத்தை விளங்கச் செய்பவளும் ஸூரியன்போன்ற ஒளியுள்ளவளுமான திரௌபதியைப் பார்த்தார். அப்பொழுது, யுதிஷ்டிரராஜர் விரைவாக [1] அவளைத் தொடவிரும்பினார்.

பிறகு, தேவராஜனும் பகவானுமான இந்திரன் அவரை நோக்கி, 'யுதிஷ்டிரரே! இவள், கர்ப்பத்தில் பிறவாதவளும் உலகங்களுக்குப் பிரியமானவளும் புண்ய ஸம்பந்தமுள்ளவளுமான லக்ஷ்மி. இவள் உமக்காகத் திரௌபதி வடிவமெடுத்துக்கொண்டு மானிடத்தன்மையை அடைந்தாள். இவள் உங்களுடைய போகத்திற்காகப் பரமசிவனால் படைக்கப்பட்டுத் துருபதனுடைய குலத்தில் பிறந்தாள். உங்களாலும் அநுபவிக்கப்பட்டாள். ராஜரே! சிறந்த பாக்கியமுள்ளவர்களும் அக்னியினுடைய ஒளிபோன்ற ஒளியுள்ளவர்களும் அளவற்ற பராக்ரமமுள்ளவர்களுமான இந்த ஐந்து கந்தர்வர்களும் உங்களுக்கும் திரௌபதிக்கும் புத்திரர்கள். திருதராஷ்டிரனென்னும் பண்டிதனை கந்தர்வராஜனைப் பாரும். நீர் இவனைத் தந்தையின் மூத்த பிராதா என்று தெரிந்து கொள்ளும். இவன், குந்தியின் குமாரனும் அக்னியின் ஒளிபோன்ற ஒளியுள்ளவனும் ஸூரியகுமாரனும் ரதிகச்ரேஷ்டனும் ராதேயனென்று பிரஸித்திபெற்றவனுமான உம்முடைய மூத்தஸஹோதரன்; ஆதித்யர்களுடன்கூடி விளங்குகிறான். புருஷச்ரேஷ்டனை இவனைப்

1. 'எல்லாவற்றையும் வினவ விரும்பினார்' என்பதுவேறுபாடம்.

பாரும். ராஜஸ்ரேஷ்டரே! மேலும், மஹாரதர்களான விருஷ்ணிகளை யும் அந்தகர்களையும் ஸாத்யகி முதலான வீரர்களையும் மிக்க பலமுள்ள வர்களான போஜர்களையும், ஸாத்யர்கள் தேவர்கள் விச்வேதேவர்கள் மருத்துக்கள் இவர்களுடைய கூட்டங்களில் பாரும். சந்திரனோடு சேர்ந்திருப்பவனும் ஸுபத்திரையின் புத்திரனும் (ஒருவராலும்) ஜயிக்கப்படாதவனும் சிறந்த வில்லாளியும் சந்திரனுக்குச் சமமான காந்தியுள்ளவனுமான அபிமன்யுவைப் பாரும் உம்முடைய பிதாவும் சிறந்த வில்லாளியுமான இந்தப் பாண்டுவானவர் குந்தியுடனும் மாத்ரியுடனும் கூடி விமானத்துடன் எப்பொழுதும் என்னுடைய அருகில் வருகிறார். வஸுக்களுடன் சேர்ந்தவரும் சந்தனுவின் புத்திரரும் அரசருமான பீஷ்மரைப் பாரும். பிருஹஸ்பதியின் பக்கத்தில் குருவான இந்தத் துரோணரைப் பாரும். பாண்டவரே! மற்றுமுள்ள இந்த மன்னர்களும் உம்முடைய யுத்தவீரர்களும் கந்தர்வர்களுடனும் யக்ஷர்களுடனும் புண்ய ஜனங்களுடனும்கூடினவர்களாகச் செல்லுகின்றனர். சில அரசர்கள் குஹ்யகர்களுடைய கதியை அடைந்தார்கள். பரிசுத்தமான வாக்கும் புத்தியும் செய்கையும் உடையவர்களால் சரீரத்தைவிட்டு ஸ்வர்க்கம் ஜயிக்கப்பட்டது' என்று கூறினேன்'' என்று சொன்னார்.

ஐந்தாவது அத்யாயம்

——:0:——

(பீஷ்மர் முதலியவர்கள் ஸ்வர்க்கத்தை அனுபவித்துத் தம்தம் தேவருபத்தில் கலந்ததும், ஜனமேஜயர் ஆஸ்தீகர் முதலியவர்களைப் பூஜித்து யாகத்தை முடித்து ஹஸ்தினாபுரம் வந்து அரசாட்சி செய்ததும், ஸூதர் பாரதகதையை முடித்து அதன் மஹிமையைக் கூறியதும்.)

ஜனமேஜயர், "மஹாத்மாக்களான பீஷ்மர் துரோணர் இருவர்களும் திருதராஷ்டிரராஜனும் விராடன் துருபதன் இருவர்களும் சங்கனும் உத்தரனும் திருஷ்டகேதுவும் ஜயத்ஸேனனும் ஸத்யஜித் என்னும் அந்த அரசனும் துரியோதனனுடைய புத்திரர்களும் ஸுபல புத்திரனை சகுனியும் பராக்ரமசாலிகளான கர்ணபுத்திரர்களும் அரசனை ஜயத்

1. தேவலோக வாஸிகளில் ஒருவகையார்; ராக்ஷஸர் என்னும் பொருளில் வழங்குகிறது.

ரதனும் கடோத்கசன் முதலானவர்களும் சொல்லப்படாதவர்களான மற்றவர்களும் சொல்லப்பட்டவர்களும் வீரர்களும் ஜ்வலிக்கின்ற சரீரமுள்ளவர்களுமான மற்ற அரசர்களும் ஸ்வர்க்கத்தில் எவ்வளவு காலம் இருந்தார்கள்? அதனையும் எனக்குச் சொல்லும். பிராம்மணஶ்ரேஷ்டரே! அல்லது, அவர்கள் அவ்விடத்திலேயே எந்நாளும் இருந்தார்களா? அந்தப் புருஷஶ்ரேஷ்டர்கள் கர்மங்களின்முடிவில் எந்தக் கதியை அடைந்தார்கள்? பிராம்மண ஶ்ரேஷ்டரே! இதனை (உம்மால்) சொல்லப்படக் நான் கேட்க விரும்புகிறேன். நீர் எல்லாவற்றையும் ஜ்வலிக்கின்ற தவத்தால் பார்க்கிறீரல்லவா?" என்று வினவினர். இவ்விதம் வினவப்பட்டவரும் மஹாத்மாவான வியாஸரால் அனுமதி கொடுக்கப்பட்டவரும் பிராம்மரிஷியுமான அந்த வைசம்பாயனர் அந்த அரசருக்கு (அவற்றை) விரித்துரைக்கத் தொடங்கினர்.

"மனிதர்களுக்குப் பிரபுவே! ராஜரே! பாரதஶ்ரேஷ்டரே! கர்மங்கள் முடிந்தவுடன் எல்லாராலும் அடையத்தகுந்ததும் தேவர்களுக்கும் ரஹஸ்யமுமான இதைக் கேளும். கௌரவ்யரே! இதைச் சிறந்த தேஜஸுள்ளவரும் திவ்ய நேத்திரமுள்ளவரும் பிரதாபமுள்ளவரும் புராதனரும் சிறந்த விரதமுள்ளவரும் ஆழ்ந்த புத்தியுள்ளவரும் எல்லாவற்றையுமறிந்தவரும் எல்லாக் கர்மங்களின் கதியையும் அறிந்தவருமான வியாஸமுனிவர் சொன்னர். 'கர்மங்களின் முடிவில் தங்கள் சரீரத்தை அடைந்தார்கள்' என்று அவரால் சொல்லப்பட்டது. பரதஶ்ரேஷ்டரே! சிறந்த பராக்ரமமுள்ளவரும் சிறந்த ஒளியுள்ளவருமான பீஷ்மரானவர் வஸுலோகத்தையே அடைந்தார். எட்டு வஸுக்களோ காணப்படுகின்றனரல்லவா? துரோணரானவர், அங்கிரஸின் புத்திரர்களுள் சிறந்தவரான பிருஹஸ்பதியினிடம் பிரவேசித்தார். ஹார்த்திக்யனான கிருதவர்மாவோ மருத்கணங்களில் பிரவேசித்தான். ப்ரத்யும்னன் வந்தது போல ஸனத்குமாரரிடம் ப்ரவேசித்தான். திருதராஷ்டிரனும் அவனுடன் கூடப் புகழ்பெற்றவளான காந்தாரியும் அடைவதற்கு அரியனவான குபேரனுடைய உலகங்களை அடைந்தார்கள். பாண்டுவானவன் இரண்டு பத்தினிகளுடனும் மஹேந்திரனுடைய ஆலயம் சென்றான். விராடன் துருபதன் இருவர்களும் அரசனான திருஷ்டகேதுவும் நிசடனும் அக்ரூரரும் ஸாம்பனும் பானுவும் [1]கம்பனும் விதூரதனும் பூரிஶ்ரவஸும் சலனும் பூபதியான பூரியும் கம்ஸனும் உக்ரஸேனனும் வஸுதேவரும் புருஷஶ்ரேஷ்டனான உத்தரனும் (அவனுடைய) பிராதாவான சங்க

1. வேறுபாடம்.

னும் ஆகிய புருஷஶ்ரேஷ்டர்களான அவர்கள் விஶ்வேதேவர்களிடம் பிரவேசித்தார்கள். சிறந்த பராக்ரமமுள்ளவனும் பிரதாபமுள்ளவனும் ஸோமபுத்திரனுமான வர்ச்சஸ் என்பவன் புருஷஶ்ரேஷ்டனான அர்ஜுனனுக்கு அபிமன்யுவென்னும் புத்திரனாகப் பிறந்தான். தர்மாத்மாவும் மஹாரதனுமான அவன் ஒரிடத்திலும் மற்ற மனிதனால் செய்யப்படாததான யுத்தத்தை க்ஷத்திரிய முறைப்படி செய்து கர்மாவின் முடிவில் ஸோமனிடம் பிரவேசித்தான். புருஷஶ்ரேஷ்டரே! கொல்லப்பட்டவனான கர்ணன் ஸூரியனிடத்தில் பிரவேசித்தான். சகுனி த்வாபரத்தை அடைந்தான். திருஷ்டத்யும்னன் அக்னியை அடைந்தான். திருதராஷ்டிரனுடைய புத்திரர்களெல்லாரும் ராக்ஷஸர்களை அடைந்தார்கள். விதுரரும் யுதிஷ்டிரராஜரும் தர்மராஜனிடத்திலேயே பிரவேசித்தார்கள். பகவானும் தேவருமான பலராமர் பிதாமஹருடைய ஆஜ்ஞையினால் யோகம் செய்து பாதாளத்தில் பிரவேசித்துப் பூமியைத் தரித்தார். தேவர்களுக்கும் தேவரும் ஸநாதனரும் பிரஸித்திபெற்றவருமான அந்த நாராயணருடைய அம்சமான வாஸுதேவரோ (தாம் செய்யவேண்டிய) காரியத்தின் முடிவில் அவரிடத்திலேயே பிரவேசித்தார். ஜனமேஜயரே! வாஸுதேவருடைய மனைவிகளான அந்தப் பதினாறாயிரம் ஸ்திரீகளும் (சிறிது) காலத்தில் ஸரஸ்வதியில் முழுகி அதில் சரீரங்களை விட்டுவிட்டு ஸ்வர்க்கம் சென்று அப்ஸரஸுகளாகி மறுபடியும் வாஸுதேவரிடம் சென்றார்கள். அந்தப் பெரிய போரில் கொல்லப்பட்டவர்களும் வீரர்களும் மஹாரதர்களுமான கடோத்கசன் முதலானவர்கள் தேவர்களையும் யக்ஷர்களையும் அடைந்தார்கள். அரசரே! துர்யோதனனுக்கு ஸஹாயர்களாயிருந்த எந்த ராக்ஷஸர்கள் (என்னால்) சொல்லப்பட்டார்களோ அவர்கள் கிரமமாக மிகச் சிறந்தவைகளான எல்லா உலகங்களையும் அடைந்தார்கள். புருஷஶ்ரேஷ்டர்கள், இந்திரன் குபேரன் வருணன் இவர்களுடைய உலகங்களை அடைந்தார்கள். சிறந்த ஒளியுள்ளவரே! பாரதரே! கௌரவர்கள் பாண்டவர்கள் இவர்களுடைய இந்த எல்லாச் சரித்திரத்தையும் உமக்கு முழுதும் விஸ்தாரமாகச் சொன்னேன்" என்று சொன்னார்.

அந்த ஜனமேஜயராஜர், யாககர்மங்களில் இடைக் காலங்களில் பிராம்மணஶ்ரேஷ்டரான வைசம்பாயனரிடமிருந்து இதைக் கேட்டு மிக்க ஆச்சரியமடைந்தவரானார். பிறகு, [2]யாஜகர்கள் அவருடைய

---

1. 'அனந்த:' என்பது மூலம்.

2. யாகம் செய்விப்பவர்கள் ருத்விக்குக்கள்.

அந்தக்கர்மாவை முடிவுபெறச் செய்தார்கள். ஆஸ்திகரும் ஸர்ப்பங்களை விடுதலை அடையும்படி செய்து ஸந்தோஷமுள்ளவரானார். பிறகு, ஜனமேஜயர் அந்த எல்லாப் பிராம்மணர்களையும் தக்ஷிணைகளால் ஸந்தோஷமடையும்படி செய்தார். ஜனமேஜயராஜரால் பூஜிக்கப்பட்டவர்களான அவர்களும், பிறகு, வந்ததுபோலச் சென்றார்கள். அந்த ஜனமேஜயராஜரும் அந்தப்பிராம்மணர்களை அனுப்பிவிட்டு ஸந்தோஷத்துடன் தக்ஷசிலையிலிருந்து மறுபடியும் ஹஸ்தினாபுரம் வந்தார். ஜனமேஜயராஜருடைய ஸர்ப்பயாகத்தில் வியாஸருடைய அனுமதியினால் வைசம்பாயனரால் சொல்லப்பட்டதும் (என்னால்) நன்கு அறியப்பட்டதுமான இந்தச் சரித்திரத்தை முழுதும் சொன்னேன்.

பிராம்மணரே! புண்யமும் பவித்ரமும் உத்தமமுமான இதிஹாஸமென்று பெயருள்ள இந்தக்கிரந்தமானது, ஸத்யவாதியும், ஸர்வஜ்ஞரும், விதியை அறிந்தவரும், தர்மத்தைப்பற்றிய ஞானமுள்ளவரும், வித்வானும்,[1] அதீந்திரியரும், பரிசுத்தரும், தவத்தால் பரிசுத்தமாகச்செய்யப்பட்டசித்தமுள்ளவரும், ஐஶ்வர்யத்தில்நிலைபெற்றவரும், ஸாங்கியமும் யோகமுமுள்ளவரும், அநேக [2] தந்திரங்களை நன்கு அறிந்தவரும், மஹாத்மாக்களான பாண்டவர்கள் மிகுதியான செல்வமும் பராக்ரமமுமுள்ள மற்ற க்ஷத்திரியர்கள் இவர்களுடைய கீர்த்தியையும் தேவர்களுக்கும் தேவரும் சார்ங்கபாணியுமான வாஸுதேவருடைய விளையாட்டையும் எல்லாத்தேவர்களுடைய அம்சங்களின் பிறப்பையும் ஸாயுஜ்யத்தையும் உலகத்தில்பிரஸித்தப்படுத்துகின்றவருமான வியாஸமுனிவரால் திவ்யதிருஷ்டியினால் பார்த்துச் செய்யப்பட்டது. வித்வானும் பிராம்மணஶ்ரேஷ்டனுமான எவன் இதைப்பர்வங்களில் கேட்பானோ அவன் பாவங்களைஉதறியவனும் ஸ்வர்க்கத்தைஜயித்தவனுமாகி மோக்ஷத்தை அடையத் [3] தகுந்தவனாகிறான். வியாஸரால் செய்யப்பட்ட இந்த வேதத்தை முழுதும் எவன் பணிவடக்கத்துடன் கேட்பானோ (அவனுடைய) பிரம்மஹத்தியினால் உண்டுபண்ணப்பட்ட பாபமும் அந்த க்ஷணத்திலேயே நசிக்கிறது. எவன் இதை ஶ்ராத்தத்தில் பிராம்மணர்களை அருகிலிருந்துகொண்டு ஒருஶ்லோகத்தில் நான்கிலொரு பாகத்தையாவது கேட்கச் செய்வானோ அவனுடைய பித்ருக்களை அன்னமும் பானமும் குறைவின்றி அடைகின்றன. [4] ஸாயங்காலத்தில் மஹாபாரதத்தைப் படித்தால் பகலில் இந்திரியங்களாலும் மனத்தாலும் செய்த

1. இந்திரியங்களை வசப்படுத்தினவர். 2. ஸித்தாந்தங்களை
3. 4. வேறுபாடம்.

பாபத்தினின்று விடப்படுவான். பிராம்மணன் காலையில் மஹாபாரதத்தைப்படித்தால், ஸ்திரீகளுடைய கூட்டங்களால் சூழப்பட்டு இரவில் செய்தபாபத்தினின்று விடப்படுகிறான். இது [1]மஹத்தாக இருப்பதினாலும் [2]பாரமுள்ளதாக இருப்பதினாலும் மஹாபாரதமென்று சொல்லப்படுகிறது. இதனுடைய [3]நிருக்தத்தை எவன் அறிகிறானோ அவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடப்படுகிறான். பதினெட்டுப் புராணங்களும் எல்லாத் தர்மசாஸ்திரங்களும் அங்கங்களுடன் கூடின வேதங்களும் ஒரு தட்டிலும் பாரதம் ஒரு தட்டிலும் இருக்கின்றன. மஹாத்மாவும் பதினெட்டுப் புராணங்களையும் செய்தவரும் வேதத்திற்குப் பெருங்கடலாயிருப்பவருமான அந்த முனிவருடைய இந்த ஸிம்மநாதமானது கேட்கப்படட்டும். பிரபுவும் பகவானுமான வியாஸமுனிவர், சிறந்ததும் புண்யமுமான இந்தப்பாரதம் முழுதினையும் மூன்றுவருஷங்களில செய்தார். ஜயமென்று பெயருள்ள (இந்த) மஹாபாரதத்தை எப்பொழுதும் பக்தியுடன் கேட்டால் அவனுக்குச் செல்வமும் புகழும் கல்வியும் எப்பொழுதும் சேர்ந்தே உண்டாகின்றன. பரதஸ்ரேஷ்டரே! அறம் பொருள் இன்பம் வீடுகளைப்பற்றி இதில் உள்ளதுதான் மற்றதிலும் இருக்கின்றது. இதில் இல்லாதது ஓரிடத்திலும் இல்லை. ஜயமென்று பெயருள்ள மஹாபாரதமானது எப்பொழுதும் எவ்விடத்தில் படிக்கப்படுகிறதோ அவ்விடத்தில் ஸ்ரீயும் கீர்த்தியும் வித்தையும் எப்பொழுதும் ஸந்தோஷமாக இருக்கின்றன. அக்காலத்தில் ஜனமேஜயர் முதலான அரசர்களும் ஆஸ்திகர் முதலான பிராம்மணர்களும் தர்மதத்தன் முதலான வைஸ்யர்களும் ஸோம்யவம்ஸ்யன் முதலான சூத்திரர்களும், பாரதத்தைச் சொல்லுகின்றவரும் பிரம்மரிஷியும் மஹாகுருவுமான வைசம்பாயனரைப் பொற்பீடத்தில் வீற்றிருக்கச் செய்து மஹாகுருவான அவரை லக்ஷம் நிஷ்கங்களாலும் பதினாயிரம் நிஷ்கங்களாலும் ஆயிரம் நிஷ்கங்களாலும் நூறுநிஷ்கங்களாலும் பத்து நிஷ்கங்களாலும் பூஜித்தார்கள். மரித்துப்பிறக்கும் புத்திரனுள்ளவன் பத்து நிஷ்கங்களைக்கொடுத்து மரிக்காதபுத்திரனுள்ளவனானான். ஜ்வரம்முதலானவியாதிகளுள்ளவன் நூறு நிஷ்கங்களைக் கொடுத்து வியாதியற்றவனானான். ஸந்ததியில்லாதவன் ஆயிரம் நிஷ்கங்களைக்கொடுத்துப் புத்திர ஸந்ததியுள்ளவனானான். அவர்கள் ஆயுளையும் ஆரோக்கியத்தையும் ஐஸ்வரியத்தையும்

1. பெரிதாக இருப்பது 2. கௌரவமுள்ளது.

3. பெயரின் உறுப்புக்களைப் பிரித்துப் பொருள் சொல்வது.

அன்னத்தையும் புத்திரர்களையும் அடைந்தார்கள். ஸுவர்ணத்தையும் வெள்ளியையும்ரத்தினத்தையும் எல்லா ஆபரணங்களையும் எல்லாஸாமக்ரிகளோடுங்கூடினதும் புதையலுடனும் பொக்கசத்துடனும் கூடினதும் செங்கல்லுகளாலாகிய சுவர்களுடன் கூடினதும் அக்னிபாதை முதலானவை அற்றதும் தேவர்களைப் பூஜிப்பதற்கும் அக்னிஹோத்ரம் முதலானவை செய்வதற்கும் படிப்பதற்குமுள்ள வீடுகளுள்ளதும் உள்ளிலும் வெளியிலும் மதில்களுள்ளதும் உப்பரிகைகளுடன்கூடினதும் கோசாலைகளுடன் கூடினதுமான வீட்டை ஸ்வர்க்காரோஹணபர்வத்தைக் கேட்குங் காலத்தில் தனித்தனியாகவாவது சேர்த்தாவது கொடுக்கவேண்டும். மோக்ஷத்தில் விருப்பமுள்ளவனுக்குக் கொடுத்தால், (அவனுக்கு) மறுபடியும் பிறப்பில்லை. ஆசையுள்ளவனாக இருந்தால் பிரம்ம கல்பம் வரையில் பிரம்மாவின் கிருஹத்தில் ஸுகமாக வஸிப்பான். புராணத்தின் முகமாக வேதாந்தஜ்ஞானமானது அடையப்படுகிறது. ஆகையினால், அவர் குருவென்று சொல்லப்பட்டார். அவரைப்பூஜிப்பது ஈசுவர பூஜையாகும். பாரதத்தைச் சொல்லுகின்றவனையும் கேட்பவர்களையும் எழுதுகின்றவர்களையும், ஸித்தர்களும் பரமரிஷிகளும் மிக்கஸந்தோஷத்துடன் பூஜிக்கிறார்கள். மஹாபாரதத்தைச் சொல்பவனை இவ்வுலகில் எந்தமனிதர்கள் பூஜிக்கவில்லையோ அவர்களுடைய எல்லாநற்கர்மங்களும் நசித்துவிடும் தேவர்களும் சபிப்பார்கள். ஜயமென்று பெயருள்ள இந்த இதிஹாஸமானது ஜயத்தை விரும்புகின்ற [1]அரசனாலும் அரசகுமாரர்களாலும் கர்ப்பிணியான ஸ்திரீயினாலும் கேட்கத்தக்கது. ஸ்வர்க்கத்தை விரும்புகின்றவன் ஸ்வர்க்கத்தை அடைவான். ஜயத்தை விரும்புகிறவன் ஜயம் பெறுவான். கர்ப்பிணியானவள் புத்திரனையாவது மிக்க பாக்கியமுள்ள புத்திரியையாவது அடைவாள். நித்யஸித்தரும் முக்திபெற விருப்பமுள்ளவரும் பிரபுவுமான வியாஸர் இந்தப் பாரதத்தின் [2]ஸந்தர்ப்பத்தைத் தர்மத்தில் விருப்பத்துடன் செய்தார். அவர் (நான்கு) வேதங்களையும் காட்டிலும் வேறான அறுபது லக்ஷம் [3]ஸம்ஹிதைகளைச் செய்தார். (அவற்றுள்) தேவலோகத்தில் முப்பது லக்ஷங்களும் பித்ருலோகத்தில் பதினைந்து லக்ஷங்களும் யக்ஷலோகத்தில் பதினான்கு லக்ஷங்களும் வைக்கப்பட்டனவென்று அறியவேண்டும். ஒரு லக்ஷம் ஸம்ஹிதைகள் மானிடலோகங்களில் சொல்லப்பட்டன. நாரதர் தேவர்களுக்கும், அஸிதரென்னும்தேவலர் பித்ருக்களுக்கும், சுகர்

---

1. 'பிராம்மணனாலும், அரசனாலும்' என்பது வேறுபாடம்.
2. கதையின் பொருத்தம். 3. பதங்களின் சேர்க்கை.

ராக்ஷஸர்களுக்கும் யக்ஷர்களுக்கும், வைசம்பாயனர் மனிதர்களுக்கும் சொன்னார்கள். சௌனகரே! புண்யமும் சிறந்த அர்த்தமுள்ளதும் வேதத்திற்கொப்பானதும் வியாஸரால் சொல்லப்பட்டதுமான இந்த இதிஹாஸத்தை எவன் பிராம்மணனை முன்னால்வைத்துக்கொண்டு கேட்கிறானோ அந்தமனிதன் இவ்வுலகில் எல்லா இஷ்டங்களையும் கீர்த்தியையும் அடைந்து மேலான ஸித்தியையும் அடைவான். இதில் எனக்கு ஸம்சயமில்லை. புண்யமான இந்த ஸம்ஹிதையைப் புத்திரரான சுகருக்கு ஓதுவித்த வியாஸரிடத்தில் மிக்க ஶ்ரத்தையுடனும் பக்தியுடனும் ஶ்லோகத்தின் நான்கிலொருபாகத்தையாவது படித்துப் பிறருக்குச் சொல்பவன் பாரதத்தை (முழுதும்) அத்தியயனம்செய்த புண்ணியத்தை அடைந்து (மேலான ஸித்தியை அடைவான்). (அவனால்) 'ஸம்ஸாரங்களில் அனுபவிக்கப்பட்டவர்களும் வந்திருக்கிறவர்களும் வரப்போகின்றவர்களுமான ஆயிரக்கணக்கான தாய் தந்தையர்களும் நூற்றுக்கணக்கான மக்கள் மனைவிகளும் (மேலான கதியை) அடைவார்கள். ஆயிரக்கணக்கான ஸந்தோஷகாரணங்களும் நூற்றுக்கணக்கான பயகாரணங்களும் தினந்தோறும் மூடனை அடைகின்றன; பண்டிதனை அடைகிறதில்லை. நான், கைகளை உயரத் தூக்கிக்கொண்டு உரக்கச் சொல்லுகிறேன். என்னுடைய வார்த்தையை ஒருவரும் கேட்கவில்லை. தர்மத்தால் பொருளும் இன்பமும் உண்டாகின்றன. அந்தத் தர்மம் ஏன் அநுஷ்டிக்கப்படவில்லை? காமத்தினாலாவது பயத்தினாலாவது ஆசையினாலாவது ஜீவனத்தின் நிமித்தமாகவாவது தர்மத்தை ஒருகாலும் விடக்கூடாது. தர்மம் நித்யமானது. ஸுக துக்கங்களோ அநித்யமானவை. ஜீவன் நித்யமானது. அதற்குக் காரணமோ அநித்யமானது' என்னும் இந்தப் பாரதஸாவித்ரியை எவன் விடியற்காலையில் எழுந்திருந்து படிப்பானோ அவன் பாரதத்தைப்படித்த பயனை அடைந்து பரப்ரம்மத்தை அடைவான். பெருமை பொருந்திய ஸமுத்திரமும் இமயமலையும் இரண்டும் ரத்தினங்களுக்கு நிதிகளென்று பிரஸித்தமானவைகளாக இருப்பதுபோலப் பாரதமும் (ரத்தினங்களுக்கு நிதியாகச்) சொல்லப்படுகின்றது. வித்வானானவன் வியாஸரால் செய்யப்பட்ட இந்த வேதத்தைப் பிறருக்குச் சொன்னால், பொருளை அடைவான். எவன் மிக்க மனவடக்கத்துடன் இந்தப்பாரதமென்னும் ஆக்யானத்தைப்படிப்பானோ அவன் சிறந்தஸித்தியை அடைவான். இது விஷயத்தில் எனக்கு ஸந்தேகமில்லை. எவன் வியாஸருடைய உதடுகளினின்று வெளிப்பட்டதும் அறியமுடியாதமஹிமையுள்ளதும்

புண்யமும் பவித்ரமும் பாவத்தைக் கவர்வதும் சுபமுமான பாரதத்தை (ஒருவர்) சொல்லும்பொழுது நன்கு தெரிந்துகொள்கிறானோ அவனுக்குப் புஷ்கரஜலங்களில் ஸ்நானத்தினால் என்ன பயன்? ஸுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட நூறு பசுக்களை வேதத்தைஅறிந்தவனும் அதிகமானசாஸ்திரங்களைப் படித்தவனுமான பிராம்மணனுக்குக் கொடுப்பவனுக்கும் புண்யமான பாரதகதையை எப்பொழுதும் கேட்பவனுக்கும் ஸமமானபயன்கிடைக்கின்றது. ஆஸ்திகனும் புத்தியுள்ளவனுமான புருஷன் ச்ரத்தையோடு கூடினவனும் ஸந்தோஷமுள்ளவனுமாக இருந்து கொண்டு (பாரதத்தைக்) கேட்டால் மிக்க இஷ்டமான விருப்பத்தையெல்லாம் அடைவான். எந்த வித்வான் சுத்தனாக இருந்துகொண்டு தாமரைமலர்போல நீண்டகண்களுள்ளவரானவாஸுதேவரை நினைத்துக் கொண்டு அவரிடத்தில் சென்ற மனமுள்ளவனாகிப் புண்யமும் சிறந்த பொருளுள்ளதும் வேதத்திற்கொப்பானதுமான இந்த இதிஹாஸத்தைப் பிராம்மணனை முன்னால் வைத்துக்கொண்டு (மற்ற) வர்ணத்தார் முதலானவர்களைக் கேட்கும்படி செய்வனோ அவன் எல்லாப் பாவங்களும் தொலைந்து பரிசுத்தமான ஆத்மாவுள்ளவனாகி இவ்வுலகில் புகழ் பெற்றுப் போகங்களை அடைந்து சிறந்த ஸுகத்தை அனுபவித்து, பிறகு, வியாஸருடைய அனுக்கிரஹத்தால் ஸ்வர்க்கலோகத்தை அடைவான். த்விஜனானவன் இதனை முழுதும் தெரிந்துகொண்டால் எல்லா வேதங்களின் அர்த்தங்களையும் அறிந்தவனும் எப்பொழுதும் பூஜிக்கத் தக்கவனும் கௌரவிக்கத்தக்கவனுமாவான்'' என்று சொன்னார்.

ஸ்வர்க்காரோஹணபர்வம் முற்றிற்று.

*மஹாபாரதச்ரவணவிதி அத்யாயம்.

-:0:-

ஜனமேஜயர், "பகவானே! வித்வான்கள் பாரதத்தை எந்த விதியுடன் கேட்கவேண்டும். பயன் என்ன? இதைப் [1]பாராயணம் செய்யும்

---

*இந்த அத்யாயம் ஹரிவம்சத்தில் உள்ளது. மஹாபாரதத்தைப் படிப்பவர்களின் உபயோகத்திற்காக இங்கே சேர்க்கப்பட்டுள்ளது.

1. 'பாரணேஷு' என்பது மூலம்;' மஹாபாரதத்தை விதிப்படி ஒருமுறைப்படித்து முடிப்பது' என்பர். 'ஒருமுறை உட்கார்ந்து படித்து முடிக்கும் அளவு'என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.